# கூட்டுறவுச் சங்கங்களுக்கான முதல் கட்டத் தேர்தல்

## 62,886 பேர் வேட்பு மனுத்தாக்கல்

## தேர்தல் ஆணையர் அறிவிப்பு

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஐந்து நிலைகளில் நடைபெறும் என்றும், முதல் நிலையில் 22,192 சங்கங்களுக்கான தேர்தல் நான்கு கட்டங்களாக நடைபெறும் என்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநில தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) கடந்த 04.03.2013 அன்று தேர்தல் அறிவிப்பு வெளியிட்டிருந்தார். இந்த நான்கு கட்டங்களுக்கான தேர்தல் அட்டவணையும் தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டிருந்தது.

## முதல் கட்டத் தேர்தல்

கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள அட்டவணைப்படி முதல் கட்டத்தில் இடம்பெறும் சங்கங்களுக்கான வேட்புமனுத்தாக்கல் கடந்த 29.03.2013 வெள்ளியன்று தொடங்கியது. முதல் கட்டத்தில் 5,499 கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த 5,499 சங்கங்களுக்கு மொத்தம் 57,409 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். 29.03.2013 அன்று நடைபெற்ற வேட்பு மனுத்தாக்கலின்போது மொத்தம் 62,886 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. வேட்பு மனுக்கள் பரிசீலனையின்போது தகுதியில்லாத 3,439 வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. பரிசீலனைக்குப் பிறகு 59,447 மனுக்கள் தகுதியுள்ளவையாக அறிவிக்கப்பட்டன.

## வேட்பு மனு பெறப்படாத சங்கங்கள்

முதல் கட்டத் தேர்தல் நடைபெற வேண்டிய 5,499 சங்கங்களில் 354 சங்கங்களில் ஒரு இடத்திற்குக் கூட வேட்பு மனு பெறப்படவில்லை. வேறு சில சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை அளவுக்கு குறைவாகவே வேட்பு மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இந்த சங்கங்களின் தேர்தல் அலுவலர்களிடம் அறிக்கை பெற்றபின் இந்த காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு தேர்தல் நடத்துவது குறித்து தேர்தல் ஆணையம் பின்னர் பரிசீலித்து முடிவெடுக்கும்.

## போட்டியின்றி தேர்வு

வேட்பு மனுக்களை திரும்பப் பெறுவதற்கான கடைசி நாள் 30.03.2013 மாலை 4.00 மணி வரை ஆகும். வேட்பு மனு திரும்பப் பெறப்பட்ட பிறகு 4,735 கூட்டுறவு சங்கங்களில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 410 கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டுமே 05.04.2013 அன்று நிர்வாகக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கு தேர்தல் நடைபெறவுள்ளது. இதன் விவரம் வருமாறு :

| செயற்பதிவாளர் பெயர் | முதல்கட்ட தேர்தல் நடைபெற வேண்டிய சங்கங்கள் | வேட்பு மனுக்கள் பெறப்படாத சங்கங்கள் | வேட்பு மனு பெறப்பட்ட சங்கங்கள் | நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்ட சங்கங்கள் | நிர்வாகக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க 05.04.2013 அன்று தேர்தல் நடைபெற உள்ள சங்கங்கள் |
|---|---|---|---|---|---|
| கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 1698 | 19 | 1679 | 1377 | 302 |
| தொழில் வணிகத்துறை ஆணையர் | 113 | 6 | 107 | 103 | 4 |
| மீன் வளத்துறை ஆணையர் | 70 | - | 70 | 67 | 3 |
| கதர் கிராமத் தொழில் வாரிய முதன்மை செயல் அலுவலர் | 49 | - | 49 | 48 | 1 |
| கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் | 78 | 3 | 75 | 74 | 1 |
| கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் | 341 | 11 | 330 | 317 | 13 |
| பால்வளத்துறை ஆணையர் | 2525 | 275 | 2250 | 2180 | 70 |
| பதிவாளர் (வீட்டுவசதி) | 221 | 2 | 219 | 213 | 6 |
| ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் | 13 | - | 13 | 13 | - |
| ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் | 45 | 37 | 8 | 8 | - |
| வேளாண்மைத்துறை இயக்குநர் | 93 | 1 | 92 | 91 | 1 |
| சமூக நலத்துறை இயக்குநர் | 49 | - | 49 | 42 | 7 |
| பட்டுப்பூச்சி வளர்ப்புத்துறை இயக்குநர் | 12 | - | 12 | 12 | - |
| பனைவெல்ல அபிவிருத்தி வாரியம் | 192 | - | 192 | 190 | 2 |
| மொத்தம் | 5499 | 354 | 5145 | 4735 | 410 |

மேற்குறிப்பிட்டவாறு 14 துறைகளின்கீழ் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களில் முதல் நிலையில் முதல் கட்ட தேர்தல் நடைபெறும் 5,499 சங்கங்களில் 57,409 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதற்கு 4,735 சங்கங்களில் 45,253 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 6,502 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இட ஒதுக்கீட்டின்கீழும், 13,454 பேர் பெண்கள் இட ஒதுக்கீட்டின் கீழும், 25,297 பேர் பொதுத் தொகுதிகளின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 05.04.5013 அன்று தேர்தல் நடைபெற வேண்டிய 410 சங்கங்களில் 3,979 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதற்காக 8,002 பேர் களத்தில் உள்ளனர்.

<u>அடுத்த கட்டத் தேர்தல்கள்</u>

இரண்டாம் கட்டத் தேர்தலில் 5,603 சங்கங்களுக்கு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். இதற்கான தேர்தல் 12.04.2013 அன்று நடைபெற உள்ளது. வேட்பு மனு தாக்கல் 04.04.2013 அன்றும், வேட்பு மனுக்களை திரும்பப் பெறுதல் 05.04.2013 அன்றும் நடைபெற உள்ளது. இந்த இரண்டாம் கட்டத் தேர்தலுக்கான இறுதி வாக்காளர் பட்டியலை வாக்காளர் பட்டியல் அலுவலர் வெளியிட்டுள்ளார். மூன்றாம் கட்டத் தேர்தல் 19.04.2013 அன்று நடைபெற உள்ளது, இதற்கான வேட்பு மனுத் தாக்கல் 09.04.2013 அன்று நடைபெற உள்ளது. நான்காம் கட்டத் தேர்தல் 27.04.2013 அன்று நடைபெற உள்ளது. இதற்கான வேட்பு மனுத்தாக்கல் 15.04.2013 அன்று நடைபெற உள்ளது என கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநில தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தெரிவித்துள்ளார்.

1.4.13

ஆணையர்